ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2023 யூலை 07 |

# பணம் தூயதாக்கலுக்கெதிரான வழிமுறைகளை துரிதமாக அதிகரிக்குமாறு உண்மைச் சொத்து முகவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவானது "பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்பு கடப்பாடுகள் மற்றும் புதிய அபிவிருத்திகள்" பற்றி 2023 யூன் 26 அன்று உண்மைச் சொத்துத் துறைக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்றை ஏற்பாடுசெய்தது. இலங்கை மத்திய வங்கி ஆளுநரும்/பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான முனைவர் நந்தலால் வீரசிங்க தலைமை உரையினை நிகழ்த்தியதுடன் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. டபிள்யு. எஸ். சத்யானந்த, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் எந்திரி. ஆர். எச். ருவினிஸ் மற்றும் உண்மைச் சொத்துத் துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி திரு. ஹார்டி ஜமால்தீன் ஆகியோரும் கூடியிருந்தவர்களுக்கு உரை நிகழ்த்திய அதேவேளை கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் தலைவர் திரு. சரண கருணாரத்னவும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். தொழிற்துறையிலிருந்தும் அதேபோன்று பதிவாளர் நாயகம் திணைக்களம், கொழும்பு காணிப் பதிவகம், இலங்கை கூட்டு ஆதன அபிவிருத்தியாளர்களின் அமைப்பு, கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை, இலங்கை வர்த்தக சம்மேளம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிலிருந்தும் 120 இற்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

கலந்துகொண்டோருக்கு உரை நிகழ்த்துகையில் முனைவர் வீரசிங்க, உண்மைச் சொத்துத் துறையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி, துறையினுள் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தலானது துறையில் காணப்படும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகள் தணிக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்கின்ற அதேவேளை பன்னாட்டு பரிந்துரைகள், ஆளுகை மற்றும் ஊழலுக்கெதிரான கட்டமைப்பு என்பவற்றின் கீழ் கடப்பாடுகளை நிறைவுசெய்யும் என்பதை எடுத்துக்காட்டினார். அத்தகைய முயற்சிகள், நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துமென்று அவர் குறிப்பிட்டதுடன் இத்தேசிய முயற்சியை நோக்கி நிதியியல் உளவறிதல் பிரிவுடனும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுடனும் நெருங்கிப் பணியாற்றுமாறு துறையின் ஆர்வலர்களுக்கு அழைப்புவிடுத்தார்.

திரு. சத்யானந்த தனது உரையில், இலங்கையின் உண்மைச் சொத்துத் துறையானது துரிதமாக அதிகரித்துள்ளதுடன் அண்மைய காலங்களில் வீடு மற்றும் ஆதனத்திற்கான கேள்வியில் சிறிதளவான பின்னடைவு அடுத்த சில ஆண்டுகளுக்குள் இயல்புநிலைக்குத் திரும்புமென்று எதிர்வுகூறப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார். அதற்கமைய, உண்மைச் சொத்துத் துறைக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவது என்பது துறையில் காணப்படும் பாதிக்கப்படும்தன்மையின் அளவினைக் குறைப்பதன் மூலம் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவதுடன் முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்தி இதனூடாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு உண்மைச் சொத்துத் துறையின் ஈர்க்கும் தன்மையினை அதிகரிப்பதற்கு மேலும் இது உதவும்.

எந்திரி. ருவினிஸ் தனது உரையில், உண்மைச் சொத்துத் துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக எதிர்பார்க்கப்படும் பெறுபேறானது பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மைக் கலாசாரம் பேணிவளர்க்கப்பட்டு வருகின்றது என்பதனை உறுதிசெய்வதற்கானதாகும். நாட்டில் நிலைபேறான அபிவிருத்தியையும் சுபீட்சத்தையும் எய்துவதற்கு இது பணியாற்றும் எனக் குறிப்பிட்டார்.

இலங்கையின் உண்மைச் சொத்துத் துறையானது இறுதியில் உத்வேகமிக்க நிலையில் காணப்படுகின்றதென்றும் தொழிற்துறையினுள் உலகத் தரம்மிக்க இணங்குவிப்புக் கலாசாரத்தை நிறுவுவதற்கான சரியான தருணம் இதுவென்றும் இத்துறையானது முதலீட்டாளர்களுக்கான உலகத் தரம்மிக்க அடைவிடமாக விளங்குவதற்கு முனைகின்றதென்றும் வலியுறுத்தி கலந்துகொண்டோருக்கு உரைநிகழ்த்திய உண்மைச் சொத்துத் துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்திய திரு. ஜமால்தீன் குறிப்பிட்டார். உண்மைச் சொத்துத் துறையானது வேறு நாடுகளில் உள்ளதைப் போன்று தனியொரு ஒழுங்குமுறைப்படுத்துநரை கோருவதாக இருக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர். அயேஸ் ஆரியசிங்க மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எந்திரி. சவிந்திர அமரசேகர ஆகியோர் மூலம் தொழில்நுட்ப அமர்வுகள் நடாத்தப்பட்டன.

2014ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க நிர்மாண கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் துணைச் சட்டவாக்கங்கள் என்பவற்றின் கீழ் தற்போது காணப்படுகின்ற சட்டவாக்கக் கட்டமைப்பை திரு. அமரசேகர விளங்கப்படுத்தினார். நிர்மாணக் கைத்தொழில் பங்கேற்பாளர்களை பதிவுசெய்வதில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை எதிர்கொள்கின்ற தடைகள் மற்றும் ஒட்டுமொத்தமாக உண்மைச் சொத்துத் துறைக்கென ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்துவதில் முன்னோக்கிய பாதை என்பன பற்றியும் அவர் விளக்கினார். ஆதன மற்றும் நிர்மாண அபிவிருத்தியாளர்களுக்காக ஏற்கனவே பதிவேடுகள் பேணப்படுகின்றன என்று அவர் எடுத்துக்காட்டியதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுகூலங்களைப் பெறுவதற்கு இக்கட்டமைப்பினைப் பயன்படுத்துமாறு பங்குதாரர்களுக்கு அழைப்புவிடுத்தார். மேலும், தற்போதைய சூழ்நிலை காரணமாக கட்டாய அலுவலர் தேவைப்பாடு போன்ற

பதிவுசெய்வதற்கான தேவைப்பாடுகள் மீது நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபையினால் விதிக்கப்பட்ட அண்மைய தளர்த்தல்களை அவர் குறிப்பிட்டார்.

முனைவர் ஆரியசிங்க, அவரது எடுத்துரைப்பில், உண்மைச் சொத்து வியாபரங்கள், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் அறிக்கையிடல் கடப்பாடுகளைக் கொண்டுள்ள பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்களின் பாகமாகுமென விளக்கினார். மேலும், உண்மைச் சொத்துத் துறையின் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுக்குட்படுத்தலை நடுத்தரம் - உயர்வானது ஆக நாட்டின் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு 2021/22 உறுதிப்படுத்தியுள்ளது. துறையின் நடுத்தர – உயர்வான அச்சுறுத்தல் மட்டத்தினதும் நடுத்தரமட்ட பாதிக்கப்படும் தன்மையினதும் ஒன்றிணைவாக இது காணப்படுகின்றது. பதிவுசெய்யப்பட்ட உண்மைச் சொத்து நிறுவனங்களின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வையை நிறைவேற்றுவதற்கு 2018 தொடக்கம் நிதியியல் உளவறிதல் பிரிவினால் பின்பற்றப்பட்ட வழிமுறைகளின் காரணமாக துறையின் பாதிக்கப்படும்தன்மை அதன் 2014 நடுத்தர – உயர் மட்டத்திலிருந்து நடுத்தர மட்டத்திற்கு கீழ்நோக்கிச் சென்றுள்ளது எனவும் அவர் எடுத்துக்காட்டினார். நிதியியல் கொடுக்கவல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகள் பற்றி விபரிக்கையில் அவர் உண்மைச் சொத்தை கொள்வனவு செய்தல், விற்பனை செய்தல் தொடர்பில் தமது சேவைநாடிகளுக்கான கொடுக்கல்வாங்கல்களில் உண்மைச் சொத்து முகவர்கள் ஈடுபடுகின்றபோது நிதியியல் உளவறிதல் பிரிவின் மேற்பார்வைக் குடையின் கீழ் அவர்கள் வருவதை சட்டம் உட்படுத்துகின்றது என்பதை வலியுறுத்தினார். மேலும், சட்டத்தரணிகள், நொத்தாரிசுக்கள், வேறு சுயாதீன சட்ட தொழில்சார் வல்லுநர்கள் மற்றும் கணக்காளர்கள் உண்மைச் சொத்தை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்வது தொடர்பில் தயாரிக்கின்ற போது அல்லது கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற போது கருத்தில்கொள்ளப்படவேண்டிய விடயங்களை விளக்கினார். துறையிலுள்ள நிறுவனங்கள் மத்தியில் நன்கு வசதியளிக்கப்பட்ட இணங்குவிப்பு அலுவலர்களுக்கான தேவையினையும் அவர் வலியுறுத்தினார். துறையில் விழிப்புணர்வு மட்டம் குறைவாக உள்ளதனை ஒட்டுமொத்த மதிப்பீடும் எடுத்துக்காட்டியுள்ளதையும் முனைவர் ஆரியசிங்க குறிப்பிட்டார். நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் விசேடமாக சந்தேகத்திற்கிடமான கொடுக்கவல்வாங்கல் அறிக்கைகளை அனுப்புவதில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டியதன் முக்கியத்துவத்தினை அவர் மேலும் வலியுறுத்தினார். 2025 மாச்சிற்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் அடுத்த பரஸ்பர மதிப்பீட்டினை எதிர்கொள்வதற்கு துறை தயாராகவுள்ளது என்பதனை உறுதிசெய்யுமாறு பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்தினார்.

கலந்துரையாடலின் போது, அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்வதை கட்டாயமாக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையை அல்லது உள்ளூராட்சி அமைச்சைக் கோருவதற்கு கலந்துகொண்டோரிடமிருந்து ஆலோசனை முன்வைக்கப்பட்டது. துறையில் மேலும்

வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்துவதற்கும் வெற்றியடைவதற்கு அனைவரும் சமமான சந்தர்ப்பத்தினைக் கொண்டிருப்பதற்கும் அத்துடன் இத்துறையை மேலும் தொழில்சார் பண்புமிக்கதாக ஆக்குவதற்கான நுழைவுப் பிரமாணத்தை ஏற்பாடுசெய்வதற்கும் உண்மைச் சொத்து கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற தரகர்களை பதிவுசெய்வதற்கு கலந்துகொண்டோரிடமிருந்து வேண்டுகோள் எழுந்தது.

ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை அறிந்துகொள்வதற்கும் அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கும் இத்தொழில்துறை போராடுகின்றது என்பது எடுத்துக்காட்டப்பட்டதுடன் அவர்களின் இணங்குவித்தல் மட்டத்தினை மேம்படுத்துவதற்கு தொழில்துறைக்கு ஆதரவளிப்பதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு மேற்பார்வையினையும் முயற்சிகளையும் அதிகரிப்பதற்கு திட்டமிடுகின்றது. முன்னைய ஆண்டுகளில் உண்மைச் சொத்து நிறுவனங்களால் மிகச் சில சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நிதியியல் உளவறிதல் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், கம்பனிகளின் நடவடிக்கைகளை மிகவும் செயல்திறன்மிக்கதாக கண்காணிக்கும் விதத்தில் உண்மைச் சொத்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளைப் பதிவுசெய்யும் பொருட்டு துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனமொன்றினை நிறுவுவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு அரசாங்கததின் ஆதரவை நாடுகின்றது. துறையினை ஒழுங்குபடுத்துவதற்கான தேவை அனைத்து பங்குதாரர்களாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் உயர்வான முன்னுரிமையினைக் கருத்திற்கொண்டு வேறான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்று தாபிக்கப்படும் வரை உண்மைச் சொத்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நிறுவனங்களை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்வதற்கான பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது உண்மையிலேயே தொழிற்துறை மூலம் வரவேற்கப்படுகின்ற முயற்சியாகும். வேறு அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு ஒப்பாக இந்நிறுவனங்களை ஏற்படுத்தும் பொருட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான நிகழ்ச்சித்திட்டங்களை துறை எடுத்துக்காட்டுவதை எதிர்பார்த்து, அதிகரித்த மேற்பார்வையினைக் கொண்டுநடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

இணங்குவித்தல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு பின்வரும் பரிந்துரைகளை தீவிரமாகப் பரிசீலனையில் கொள்ளுமாறு உண்மைச் சொத்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனிகளை துறை ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் கோருகின்றனர்:

- கட்டாயத் தேவைப்பாடொன்றாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவை மேற்கொள்ளல்.
- உண்மைச் சொத்துத் துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான பொருத்தமான சட்டரீதியான கட்டமைப்பொன்றினை முன்வைப்பதற்கு துறை பங்குதாரர்களுடன் ‘‘செயலணி’’ ஒன்றினைத் தாபித்தல்.
- வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தை வெறும் காகிதம் மீதல்லாது துறைசார்ந்த சேவைநாடிகளை இனங்காண்பதற்காக, மதிப்பிடுவதற்காக, கண்காணிப்பதற்காக, முகாமைசெய்வதற்காக நடாத்துதல் மற்றும் இடர்நேர்வுகள் உயர்வாகக் காணப்படுகின்ற போது அதிகரிக்கப்பட்ட வழிமுறைகளை வேண்டுகின்ற இடர்நேர்வு அடிப்படையிலமைந்த

அணுமுறையொன்றினைப் பயன்படுத்தி பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு செயல்திறன்வாய்ந்த நடவடிக்கைகளை எடுத்தல்.

- வாடிக்கையாளர், பயன்பெறு சொத்தாண்மை, தொழில் உறவு என்பன தொடர்பில் உரிய விழிப்புக் கவனத்தினை நடாத்துதல், கொடுக்கல்வாங்கல்களின் பதிவுகளைப் பேணுதல்.
- அதிகரிக்கப்பட்ட கண்காணித்தல் உள்ளடங்கலாக அரசியல் ரீதியாக முகங்கொடுக்கின்ற ஆட்களை இனங்காண்பதற்கு மேலதிக வழிமுறைகளை எடுத்தல்.
- பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகளுக்கெதிராக கொள்கைகளை, நடைமுறைகளை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் 1267 மற்றும் 1373 அல்லது ஏனைய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்கள் மூலம் பெயர்குறிக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கெதிராக இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்தல், சொத்துக்களை முடக்குதல் அல்லது நடவடிக்கை எடுத்தல் அத்துடன் அவற்றை தகைமையுடைய அதிகாரிகளுக்கு தொடர்பூட்டல்.
- சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை, பொருத்தமானவிடத்து நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடுதல்.
- உண்மைச் சொத்து துறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பங்குதாரர்களுடனான குழுவொன்றினால் மேலதிக நடவடிக்கைகளுக்காக பொருத்தமான கட்டமைப்பை கண்டறிதல்.




*இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர்: திரு. பரஹ்மனகே பிரேமலால் (இலங்கை கூட்டு ஆதன அபிவிருத்தியாளர்களின் அமைப்பு), எந்திரி. ஆர். எச். ருவினிஸ் (தலைவர் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை) முனைவர். நந்தலால் வீரசிங்க (இலங்கை மத்திய வங்கி ஆளுநரும்/ பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீதான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும்), திரு. டபிள்யு. எஸ். சத்யானந்த (நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர்), திரு. சரண கருணாரத்ன (கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் தலைவர்), திருமதி. கே. எம். ஏ. என். டவுலகல (இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர்)*

*இடமிருந்து வலம் நிற்போர்: எந்திரி. சவிந்திர அமரசேகர (நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்), முனைவர். அயேஸ் ஆரியசிங்க (நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர்), திருமதி. இனோகா மொஹொட்டி (நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர்), முனைவர். சுபானி கீர்த்திரத்ன (நிதியியல் உளவறிதல் பிரிவின் மேலதிகப் பணிப்பாளர், திரு. சந்திம பண்டார (நிதியியல் உளவறிதல் பிரிவின் மூத்த உதவிப் பணிப்பாளர்)*